ஸ்ரீ:

# மதுரகவி சொல்

Dr. V. V. ராமானுஜன்

ஆசிரியர்: யதிராஜ பாதுகா

---

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்கிறபடியே தீதற்றசீலரான திருவாய்மொழிப் பிள்ளையின் இன்னருளுக்குக் கொள்கலமான ஸ்வாமி மணவாளமாமுனிகள், அவ்வாசாரியரின் க்ருபையடியாகத் தாம் பெற்ற பெருமைகளைத் தாமே ஒரு பாசுரத்தில் அழகாகக் கூறுகிறார்: (ஆர்த்திப்ரபந்தம்-55)

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்...

என்று இங்கு மதுரகவி சொல் படியே நிலையாகப் பெற்றமையை பெரும் பேறாகக்கருதிப் பேசியுள்ளார் மாமுனிகள். மதுரகவி சொல் என்பது யாது? அதன் சீர்மை என்ன என்னில்: மதுரகவி சொல்லாவது அவர் தமது ஆசாரியர் விஷயமாகப் பாடியுள்ள கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற திவ்யப்ரபந்தம். இப்ர பந்தத்தை "வாய்த்த திருமந்திரத்தின் மத்திமாம்பதம்போல் சீர்த்த மதுரகவி செய்கலை" என்று போற்றுகிறார் மணவாள மாமுனிகள். மதுரகவியாழ்வாரும், "தென்குருகூர் நம்பிக்கன் பனாய் மதுரகவிசொன்னசொல் நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே" என்று ஆசார்யனான நம்மாழ்வாரிடம் அத்யந்த ப்ரேமையுடன் தாம் பாடிய பொருளின் அத்யவஸாயம் - விச்வாஸம் - உடையவர்கள் பெறுமிடம் வைகுந்தம். இது நிச்சயம் என்றருளிச் செய்கிறார். இப்ரபந்தத்தில் உயிரான பாசுரம்.

தேவுமற்றறியேன் குருகூர்நம்பி
பாவின்னிசை பாடித்திரிவனே

என்பதே "குருகூர் நம்பியான நம்மாழ்வாரை விட்டு வேறு தெய்வமறியேன்" என்ற அத்யவஸாயம் மதுரகவிகளின் தனிச் சிறப்பு. "ஆயிரம் இன்தமிழ் பாடினன்" என்கிறபடி ஆழ்வார் பாடியருளிய திருவாய்மொழி ஆயிரத்தையும் பாடியிருப்பதே எனது காலக்ஷேபமாயிருக்கும். ஆழ்வாரைத்தவிர்த்து வேறு தெய்வம் எனக்குக் கிடையாது" என்கிறார். இப்படி இருப்பவரை நாடிவந்து எம்பெருமான் தனது கரியகோலத்திருவுருவை தானே காட்டுகிறானும். ஆழ்வாருகந்த விஷயமென்பதுபற்றி அதையும் இவர் கண்டு வைப்பராம். "குருகூர் நம்பிபா என்பது ஆழ்வார் பாடிய இன்சுவைப் பாடல்களை என்னலாம் அன்றிக்கே ஆழ்வாரைப் பற்றிய இன்சுவையே வடிவாக பாவான கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னவுமாம். மதுரகவிக படியிது. மணவாளமாமுனிகளும் "மன்னியசீர் மாறன்கலை உணவாகப்பெற்றோம்" என்று ஸாதித்தருளுகையால் அவருக்கு மாறன் (நம்மாழ்வார்) பாடல்களே * உண்ணுஞ்சோறு பருகு நீராயிற்று.

மதுரகவிகள் பாடியருளிய இந்த திவ்யஸூக்தி திருமந்த்ர ஸாரம் என்பது எப்படியென்று சுருக்கமாக விளக்குவோம். சாஸ்த்ரஸாரமான திருமந்த்ரம் காட்டும் பொருளாவது "அகாரத்தினால் சொல்லப்படும் ஸகல ஜகத்காரணபூதனும் ஸர்வரக்ஷகனாய், ச்ரிய:பதியாயிருக்கும் எம்பெருமானுக்கே மகாரத்தினால் சொல்லப்படும் சேதனன் உரியவன் - சேஷபூதன் தான் தனக்கும் உரியவனன்று; பிறர்க்குமன்று; அந்த ஸ்ரீய நாராயணனுக்கே அடிமைப்பட்டவனாகவேணும்" என்பதே; திருமந்த்ரத்தையும் அதன் சீரிய பொருளையும் ஒருவனுக்கு தேசிப்பவனே ஆசாரியன் என்ற பொருளை லோகாசாரிய "நேரே ஆசார்யன், என்பது ஸம்ஸாரநிவர்த்தகமான பெரிய திருமந்திரத்தை உபதேசித்தவனை" (ஸ்ரீவசனபூஷணம்-31) என்று காட்டியருளுகிறார்.

இந்தத் திருமந்திரத்தின் ஸாரதமமான உட்பொருளை திருமங்கையாழ்வார் காட்டியருளுகிறார் (திருமொழி 8-10-3) :

மற்றுமோர்தெய்வம் உளதென்றிருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே!

என்று ஸ்வாமிந்! திருக்கண்ணபுரத்தெம் பெருமானே! அடியேன் உமது (திருவெட்டெழுத்தான திருமந்த்ரத்தைக் கற்று உற்றது உமதடியார்க் கடிமையையே" என்று தாம் அவனிடம் கற்றதன் பொருளைச் சொல்லிக்காட்டுகிறார். கண்ணபுரத்தம்மானுக் கடிமையாவது முதல்படி. அந்த பகவத்ஸம்பந்தம் நிலைபெற அவனடியார்க்கடியவனாகிறான். இவ்வடியார்களில் தலையாயவன், நமக்குத் தன் க்ருபைபடியாக நாமறிய வேண்டும் பொருள்களை யெல்லாம் எடுத்துரைத்து அறிவையுண்டாக்கியவனும். இவனே ஆசாரியன். இந்த ஆசாரியனுக்கு அடிமைப்பட்டிருத்தலே இறுதியான நிலையாம். "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" - ஆசாரியன் தனது கருணையால் "இவன் நம்மவன்" என்று நம்மை அபிமானிப்பதே (மதிப்பதே) நமக்கு உஜ்ஜீவனோபாயம் - என்பது ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரம் காட்டித்தரும் பரமார்த்தமாகும். இந்த இறுதிநிலைக்குச் (சரமபர்வநிஷ்டைக்குச்) சேர, ஆசார்யனையே ப்ராப்யப்ராபகங்களாகக் கொள்வதுதான் நமது ஸம்ப்ரதாயத்தில் மிகச்சிறந்த அர்த்தமாகக் கொள்ளப் படுகிறது. இதற்குச் சேர ஸ்ரீகீதாசரமச்லோகத்திலுள்ள மாம் ஏகம் என்பதற்கு "ஸுலபனாய் தேரோட்டியாக நிற்கும் என்னை" என்பதுடன், "ஸுலபனாய் ஆசார்யனாய் இந்த அத்யாத்ம சாஸ்த்ரத்தை சிஷ்யனாய், ப்ரபந்நனாய் கேட்கும் உனக்குச் சொல்லும் என்னை" என்றும் பொருள் கூறுவர்.

அதாவது கண்ணனை உபாயமாகப்பற்றும்போது பகவான் என்று பற்றாமல் கீதோபதிஷ்தாசார்யன் - சாஸ்த்ரஸாரத்தை - உய்வுபாயத்தை உபதேசிக்கும் ஆசார்யனிவன் என்று பற்ற வேணும். "ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரரூபி ந ஸம்சய:" என்கிற ப்ரமாணவசனத்தின்படி நமக்கு ஆசார்யனும் பெரிய திருமந்திரத்தை உபதேசிப்பவன் ஸாக்ஷாத் எம்பெருமானேதான்; மனிதவடிவில் உலாவும் பெருமானாய், நம்மிடம் பேசுபவனாய்,

நாம் அன்புடன் ஸமர்ப்பிக்கும் பொருள்களை ஏற்பவனு "ஆசாரியன் சிச்சனுருயிரைப் பேணுமவன்" என்பதற்கேற் நமது ஆத்மநலனைத் தன்பேருகக் கருதுமவனுய்த் திகழு ஒருவன்.

ஸ்ரீவசனபூஷண மஹாசாஸ்த்ரத்தின் இறுதியில் ஆசார்யனே ப்ராப்யப்ராபகங்களாகக் கொள்ளத்தக்கவன் என்பதை விஸ்தா மாக அருளிச் செய்துள்ளார் பிள்ளை உலகாசிரியர். "வேதார்த் மறுதியிடுவது" என்று தொடங்கி, "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்று இறுதியில் அறுதியிடுவதால் இதுவே பரமப் மாணமான வேதாந்தங்களின் ஸாரதமமான பொருள் என் தெறுகிறது. ஸ்ரீவசந பூஷணத்தில் இந்த சாமப்ரகரணத்தி ஸாரத்தை இங்கு சுருக்கமாக அநுபவிப்போம்.

எம்பெருமானை நேரே உபாயமாகப்பற்றினவனுக் அவனருளால் பரமபதத்தில் அவன் திருவடிகள் கைங்கர்யமாகி பேற்றைப் பெறும் வரையில் ஒருவிதபயமும், பயமின்மையு மாறி மாறி இருந்து கொண்டிருக்கும். எம்பெருமான் கேட்ப ரற்ற ஸ்வதந்த்ரனுகையாலே, நம்மைக்கை கொண்டபோதிலும் அநாதிகாலமாய் நாமீட்டியுள்ள வினைப்பயனைக் (புண்யபா மான கர்மங்கள்) கணிசித்து மீண்டும் ஸம்ஸாரத்திலேயே வைத் விட்டால் என்செய்வது என்றபயம் இருக்கும். எம்பெருமா க்ருபாளு; கைக்கொண்டவனைக் கை விடமாட்டான். ஒருவனை கைகொள்ளும்பது அவனிடம் அவனறியாத சிறுநன்மைகளை பெரிதாக்கிப் பார்த்துக்கை கொள்பவனுகையால் நம்மை வி மாட்டான் என்று பயமற்றிருக்கவும் இடமுண்டு. இறுதி பயனுன தேசவிசேஷத்தை பரமபதத்தைப் பெறுமளவும் இந் பயமும் பயமின்மையும் மாறி மாறி நடந்து கொண்டிருக்கும்.

ஆசார்யனையே உபாயமாகப்பற்றினவனுக்கு, ஆசார்ய சிஷ்யனின் உஜ்ஜீவனத்திலொன்றிலேயே நோக்குடையவ யுள்ளமையாலும், கர்மாவைப்பற்றி தண்டித்துத் தன்னு ஸ்வதந்த்ரனல்லாமையாலும், நம்மைக் கைவிடமாட்டான் என் படமின்றியிருக்கலாம். இந்த விஷயத்தில் ப்ரமாணம் மதுரக சொல்ல வேண்டோம். ஆழ்வார்கள் பதின்மரும் பகவத்துட

பெற்றபோது ''உண்டுகளித்தேற்கு உம்பரென் குறை? என்று மகிழ்ச்சி ததும்பப் பேசுபவர்கள். அப்போது பகவதநுபவத்தின் எல்லைநிலமான பாகவதநுபவத்தில் ஈடுபட்டு அதையே ப்ரதான மாகப் பேசுவர். அந்த பகவதநுபவம் இல்லாதபோது ''சாய லொடு மணிமாமைதளர்ந்தேன் நான்'' என்று தரைப்பட்டு, பாகவதர்களை ''உங்களோடு எங்கள் இடையில்லை'' என்று ஒதுக்குவர்கள். ஆனால் ''தேவுமற்றறியேன்'' என்று ஆசாரியனையே பற்றியிருந்த மதுரகவிகளுக்கு ஆழ்வார்கள் பட்ட கலக்கம் ஏற் பட்டதில்லை. இவ்வர்த்தத்தை லோகதேசிகன் ஸ்ரீவசன பூஷணத்தில் ''உண்டபோது ஒருவார்த்தையும் உண்ணுபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே; அவர் களைச் சிந்திருப்பார் ஒருவர் உண்டிறே. அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்தமறுதியிடக்கடவோம்'' (408 - 409) என்றருளிச் செய்தார். ஆழ்வார்கள் பதின்மர்படி மேலேவிளக்கப்பட்டது. ''இவர்களேன் இப்படி ப்ரதமபர்வத்திலும் (பகவானைப்பற்றுதல்) சரமபர்வத்திலும் (ஆசாரியனைப்பற்றுதல்) தோள்மாறுகின்றனர்'' என்று மதுரகவியாழ்வார் அவர்களைப் பரிஹஸித்திருப்பர். மதுரகவி சொன்ன சொல்லான கண்ணிநுண்சிறுத்தாம்பு கொண்டு இவ்வர்த்தம் (ஆசார்யனை உபாயமாகப்பற்றினால் பயமின்றியிருக்காலம் என்பது) அறுதியிடக்கடவோம் இதனால் இவர் **சீர்த்த மதுரகவி** ஆகிறார்.

மதுரகவி சொல்லான கண்ணிநுண்சிறுத்தாம்பு நம்மாழ் வார்; வைபவத்தையே பேசுவது. 1200 பாசுரத்துக்கு மேலாகப் பாடி நம்மாழ்வார் வீடுபெற்றார். உலகோர்க்கு உய்வுபாயம் காட்டினார். மதுரகவிகள் 11 பாசுரத்தில் இதைச் சாதித் துள்ளார். ஆழ்வாருடைய ஞானபக்தி வைராக்யங்கள், அவருடைய பரமக்ருபை எல்லாவற்றையும் பேசியருளும் மதுர கவி, ''திருத்தி ப்பணிகொள்வான்'' என்று ஆழ்வாருடைய சேஷித்வத்தையும், ''மேவினேன் அவன் பொன்னடி - தேவு மற்றறியேன்'' என்று அவரின் சரண்யத்வத்தையும், ''நாவினால் நவிற்றின்பமெய்தினேன், பாவினின்னிசைப் பாடித்திரிவன்'' என்று போக்யத்வ ப்ராப்யத்வங்களையும் காட்டினார். இவை பகவத்ஸ்வரூபத்தின் இறுதிநிலை. மதுரகவியாழ்வார் ப்ரதமபர்வ

மான பகவானைவிட்டு, மத்யமபர்வமான பாகவதர்கள் காட்டிய படி சாமபர்வமான ஆசார்யனையே - ஆழ்வாரையே - ப்ராப்ய மாகவும் ப்ராபகமாகவும் பரதேவதையாகவும் தாம்பற்றி, தமது ப்ரபந்தத்தின் மூலம் நமக்குக காட்டித்தருகிறார். மதுரகவி கண்ட இந்த தத்வஹிதபுருஷார்த்தங்களே நமக்கும் ஆகவேண்டும்.

''மதுரகவி சொன்னசொல் நம்புவார்பதி வைகுந்தம் காண்மின்'' என்று இவரே அருளிச்செய்கிறார். மதுரகவி சொல்வில் அத்யவஸாயம் உள்ளவர் பெறும் இடம் வைகுந்தம் என்னலாம். இவர் சொல்லே அறிந்து நம்புவார்கள் உள்ள இடமே வைகுந்தம் ''வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்'' என்பது போல என்னவும் தகும்.

**ஆழ்வார் திருவடிகளே சரணம்:**